REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 39630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✶ The official organ of the D.P.F.

தீப்பற்ருத பொருள்கள் தயாரிக்க வட நாட்டில் தொழிற்சாலை அமைகிறது

தீப்பற்ருத பொருள்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு டாடா இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவனத்தார் ஜெர்மன் நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றனர்.

இந்தப் புதிய தொழிற்சாலை 1958-ல் உற்பத்தி தவங்கும் என்றும், டாடா உருக்குத் தொழிற்சாலை, மற்றும் சர்க்கார் வசமுள்ள உருக்குத் தொழிற்சாலை இவற்றிற்கு தீப்பற்ருத பொருள்களை வழங்கும் என்றும் தெரியவருகிறது.

மலர் 3] சென்னை: மார்கழி 9௳ சனி (24—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 10௳ ஞாயிறு (25—12—55) [இதழ் 165

புயல் செய்திகளுக்கு இருட்டடிப்பு

சிங்கை இந்திய அதிகாரிகளின் இரக்கமற்ற செயல்

மலாய் தமிழ் மக்களின் மனக்குமுறல்

கோலாலம்பூர், டிச. 19—

"சிங்கப்பூரில் இந்தியாவின் தூதுவராக இருப்பவர் ஒரு வடநாட்டுக்காரராயிருப்பதால் — இங்குள்ள உதவித் தூதுவர் தமிழரல்லாதவராக இருப்பதால்தானே தமிழகத்தில் ஏற்பட்ட ப்புயல், வெள்ளம் பற்றிய செய்திகளை இங்குள்ள மக்களுக்குத் தராமல் தங்கள் விருப்பம்போல இருட்டடிப்புச் செய்தனர்?"

என்று, இங்கு நடைபெற்றப் பொதுக்கூட்டம் ஒன்றில் பலத்த கண்டனக் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சிங்கப்பூர் பிரபல வழக்கறிஞரான ரமணி பேசுகையில், "இங்கும், சிங்கப்பூரிலும் உள்ள இந்திய சர்க்காரின் இரு பிரதம அதிகாரகளும் அவர்களது துணை அதிகாரிகளும் தென்னுட்டில்—தமிழகத்தில் ஏற்பட்ட இயற்கைக் கொடுமைகள் பற்றிய செய்திகளைத் தராதுவிட்டதின் மூலம், இங்குள்ள தமிழர்கள், அவதியுறும் தங்கள் சகோதரர்களுக்கு உடனே உதவி செய்ய முடியாது தடுத்துவிட்டனர். அதிகாரிகளின் இந்தப் போக்கு வருந்தத்தக்கது—கண்டனத்திற்குரியது," என்று குறிப்பிட்டிருக்கிருர்.

மதுவிலக்கு அமுல்

நேரு தரும் எச்சரிக்கை

புதுடில்லி, டிச 23—

'மதுவிலக்கு போன்ற தீவிரமான சீர்திருத்தத்தை நாடு முழுவதிலும் அமுல் செய்வதில் மிகுந்த கவனத்துடன் இருக்கவேண்டும்' என்று பண்டித நேரு எச்சரித்திருக்கிருராம்.

மதுவிலக்கு விசாரணைக் குழு அறிக்கை பற்றிக் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும், 'நாம் மதுவிலக்கை தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறேம்; அதனை நிச்சயம் அமுல் செய்யவும் போகிறேம்; ஆனல், அந்த சீர்திருத்தத்தைக்கொண்டு செலுத்துவதற்கு தகுந்த காலமும், சூழ்நிலையும் ஏற்படவேண்டுவது அவசியம் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது,' என்றும் குறிப்பிட்டாராம்

படித்து வேலையற்றேர் தொகை:

தற்போது $5\frac{1}{2}$- இலட்சம்; அடுத்து $14\frac{1}{2}$- இலட்சமாக இருக்குமாம்!

நெருக்கடி தீர 5-கோடி ரூபாயில் திட்டமொன்று பரிசீலனையாம்

புதுடில்லி, டிச. 23—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், படித்தவரிடையே நிலவும் வேலையின்மையைப் போக்குவதற்கு ரூ. 5 கோடியில் தனித் திட்டமொன்று சேர்ப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

நாட்டில், படித்துவிட்டு வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை, தற்போது $5\frac{1}{2}$-இலட்சம் என்று உத்தியோகபூர்வமாக மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், படித்துவிட்டு வேலை தேடுவோர் எண்ணிக்கை மேலும் $14\frac{1}{2}$ இலட்சமாக இருக்கக்கூடும் என்று, திட்டக் குழுவின் கடைசி புள்ளி விபரங்கள் மூலம் தெரிகிறதாம்.

இரண்டாம் திட்டத்தில் வேலை வாய்ப்புக்கள்

மதிப்பீடு 80-இலட்சமாகக் குறைகிறது

நிதி அமைச்சர் தேஷ்முக் விளக்கம்

புதுடில்லி, டிச. 23—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள இலட்சிய எல்லைகளை அடைய வேண்டுமானல், எல்லாத் தர வாழ்க்கையிலும் ஒரு முறையான கண்டிப்பை அமுல் செய்தாகவேண்டும்," என்று, காங்கிரஸ் செயற் குழுக் கூட்டத்தில் தனி அழைப்பின் பேரில் கலந்துகொண்ட நிதிமந்திரி தேஷ்முக் குறிப்பிட்டிருக்கிருர்.

எற்கனவே மதிப்பிடப்பட்ட 110 இலட்சம் வேலைகளுக்கு மாருக, 80 இலட்சம் வேலைகளை மட்டுமே ரூ. 4,800 கோடி பெறுமான இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் உண்பேண்ணித் தரும் என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

இரண்டாம் திட்டம், கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, அதே போது சோஷலிச ரீதியான பொருளாதாரத்தை நோக்கமாகக்கொண்டிருப்பதாயும் அவர் விளக்கிஞராம்.

'எல்லோரும் கட்டுப்பாடாக இருந்து, இரண்டாம் திட்டத்தின் இலட்சிய எல்லைகளை அடைவதற்கு நாட்டவருக்கு ஊக்க மூட்டவேண்டும். ஒரு நிர்வாகி என்ற முறையில் திட்டம் நிறைவேற்றப்படக்கூடியது என்றே எனக்குத் தோன்றுகிறது,' என்றும் தேஷ்முக் குறிப்பிட்டாராம்.

மூன்று மாதச் சம்பளம் முன்பணமாம்!

சென்னை, டிச 23—

தமிழ் நாட்டில் புயலினல் பாதிக்கப்பட்டப் பகுதிகளிலுள்ள 'கெஜட்' பதிவு இல்லாத எல்லா இரயில்வே ஊழியர்களுக்கும் மூன்று மாதச் சம்பளத்தை முன் பணமாகவழங்குவதற்கு இரயில்வே போர்டு அனுமதித்திருக்கிறதாம் ரூ. 500-க்கு மேற்படாமல் அளிக்கப்படாமலிருக்கும் அந்த முன் பணத்தொகைக்கு, பாதிக்கப்பட்டுள்ள பகுதித் தொழிலாளர்கள் மனுச் செய்துகொள்ள வேண்டுமாம். 36 மாதாந்திரத் தவணைகளில் அத்தொகை திரும்பப் பெறப்படுமாம்

சென்னை மந்திரிகளின் ஏமாளித்தனம்

சித்தூர் (கொச்சி) வேண்டுமெனக் கோரவேயில்லையாம்!

பனம்பள்ளி கோவிந்த மேனன் தரும் தகவல்

திருவனந்தபுரம், டிச. 22—

'கொச்சியில் உள்ள சித்தூர், தமிழர்களுக்கு வேண்டும்' என்று, டில்லிப் பேச்சுக்களின் போது சென்னைப் பிரதிநிதிகள் கோரிக்கையே எழுப்பவில்லையாம்.

இந்தத் தகவலைத் தந்திருப்பவர் திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன்.

கேரளத்திற்கும் சென்னைக்குமிடையே தகராறு தோன்றுவித்துள்ள திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகள் பற்றி டில்லியில் காங்கிரஸ் உயர்தரக் குழுவினர் இன்னும் இரண்டொரு நாளில் தீர்ப்பு வழங்குவர் என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

திரு-கொச்சி, சென்னை ஆகிய இருமாநிலப் பிரதிநிதிகளும் தங்கள் தங்கள் கோரிக்கையைத் தெரிவித்துவிட்டனர் என்றும், அப்போது கொச்சி—சித்தூர் தங்களுக்கு வேண்டுமென சென்னைப் பிரதிநிதிகள் காங்கிரஸ் மேலிடக் குழுவிடம் கூறியிருப்பதாகத் தனக்குத் தெரியவில்லை என்றும் அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிருர்.

மூன்று அணு பெறுமான தேங்காய் 31-ரூபாய்க்கு விற்கப்பட்டதாம்!

பிள்ளையில்லாதோருக்கு வரம் தரும் புனிதம் பெற்றதாம்!

எர்ணுகுளம், டிச. 21—

மூன்றணு விலையுள்ள தேங்காய் ஒன்றை 31 ரூபாய் தந்து வாங்கினராம், ஒரு பிள்ளையே இல்லாத செட்டியார்!

புதுக்கோட்டையைச் சேர்ந்த தமிழ் வித்துவான் தியாகராசன் என்பவர், இங்கு கடந்த 15 நாட்களாக 'கம்ப இராமாயண'ச் சொற்பொழிவு நிகழ்த்தினராம்; பதினைந்தாம் நாளன்று சொற்பொழிவு முடிந்தபோது தியாகராசன் தன்னிடம் ஒரு புனிதமான தேங்காய் இருப்பதாயும், அது பிள்ளையில்லாத பெற்றேருக்குப் பிள்ளை தரும் ஆற்றல் கொண்டது என்றும் அறிவித்தாராம்.

உடனே பலர் அந்தேங்காயைக் கோரினராம்.

தேங்காய் ஏலத்திற்கு விடப்பட்டதாம்.

பிள்ளையே இல்லாத செட்டியார் ஒருவர், அந்த மூன்றணு பெறுமான தேங்காயை 31 ரூபாய் தந்து பெற்றுக் கொண்டாராம்!

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்,"

என்று, கவர்னர் பிரகாசா குறிப்பிட்டிருக்கிருர்.

'52-தொழிலாளர்கள் பலியானதற்கு முதலாளிகளே காரணம்'

நிலக்கரிச் சுரங்க விபத்து குறித்த விசாரணை

ஜாரியா நிலக்கரிச் சுரங்கத்தில் கடந்த பிப்ரவரி 5-ந் தேதியன்று 52 தொழிலாளர்களைப் பலி கொண்ட விபத்து நேர்ந்ததற்குக் காரணம் சுரங்கத்தின் நிர்வாகிகளான முதலாளிகளே என்று, விபத்து குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட பாட்னுஉயர்நீதிமன்ற நீதிபதியான பி. பி. ஜமௌர் தனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

அவரது அறிக்கை இன்று மக்கள் சபையில் தாக்கல் செய்யப்பட்டது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29-1-56-ல் சிதம்பரத்தில்

நடைபெறும்

★

இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பாதுகாப்பு இலாகா முன்னுள் அதிகாரி கைது

கம்யூனிஸ்டு கிழக்கு ஜெர்மனியில் 19-மாதங்கள் இருந்துவிட்டு, டிச. 12-ந் தேதியன்று மேற்கு ஜெர்மனிக்குத் திரும்பிவந்த பாதுகாப்பு இலாகாவின் முன்னுள் அதிகாரி டாக்டர் ஒட்டோ ஜான், அரசாங்கத் துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுள்ளாராம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—12—'55 சனி

விரிவாக்கும் முயற்சியாம்!

தெற்கின்மீது ஆதிக்கம் செலுத்த வடக்கு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் ஏராளம். வரலாற்று நூலில் பல பக்கங்களை அக்கதை விழுங்கியுள்ளது.

படைபலத்தால் வெல்ல முடியாத தெற்கைக் கலைத்துறையில் வெல்லவும் முயற்சிக்கப்பட்டது. அம் முயற்சியின் விளக்கந்தான் இராமாயண இதிகாசம் எனப் பண்டித நேருவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சி நிலை பெறுகிற வரையில் அரசியல் துறையில் தெற்கை, வடநாட்டு முடியன்னர் எவரும் அடிமை கொண்டது கிடையாது. வடக்குத் தெற்கு இணைப்பு ஆங்கிலேயரின் துப்பாக்கி முனையால் உருவாக்கப்பட்டதாகும். அதன் பின்னர்தான் டில்லியின் பிடிக்குத் தென்னாடு ஆட்பட்டுவிட்டது.

வடக்கு—தெற்கு இணைப்பு ஏற்படுத்தப்பட்டு இரு நூற்றாண்டுக் காலம்வரை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் துரைத்தனம் செய்து வந்தது. அத்துரைத்தனம் ஆங்கில மொழியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட வடக்கு—தெற்கு இணைப்பு முறிந்துவிடாமல், அரசியல் அதிகாரந்தான் கட்டிக்காத்து வந்தது. அவ்விணைப்பைக் கட்டிக்காக்கும் ஆற்றல் ஆங்கில மொழிக்கு இல்லவே இல்லை.

இருநூறு ஆண்டுக் காலம் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருந்து வந்திருக்கிறது. அதன் பின்னரும்கூட ஆங்கிலமொழி இந்தியத் துணைக்கண்டத்தில் வேர்கொள்ளவில்லை. வேற்று மொழியாகவே இன்றும் செயல்பட்டு வருகிறது.

ஆங்கில மொழியில் இல்லாத நூற்கள் இல்லை. அறிந்து கொள்ளவேண்டிய பொருள் அறிவு அனைத்தையும் அளிக்க வல்ல ஆற்றல் ஆங்கில மொழிக்கு இருக்கவும் இருக்கிறது. வெறும் கிணற்று மொழியாக இல்லாமல், உலக மொழியாகவும் ஆங்கிலம் இருந்துவருகிறது. இருந்தாலும் இந்தியத் துணைக்கண்டத்தின் வீட்டு மொழியாகும் சக்தி அம்மொழிக்கு இன்றளவும் உண்டாகவில்லை.

ஏகாதிபத்தியத்தின் பிறப்பிடமான பிரிட்டிஷ் தீவில் ஆங்கில மொழிதான் வீட்டு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் செயல்பட்டு வருகிறது. இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த இந்தியத் துணைக்கண்டத்திலும் ஆங்கில மொழிதான் ஆட்சி மொழியாக கொலுவீற்றிருந்தது. அறங்கூறு மன்றத்திலும், பல்கலைக் கழகத்திலும், துவக்கப் பள்ளியிலும் ஆங்கில மொழிதான் அன்றுரட வழக்காக இருந்து வந்தது.

இங்கிலாந்திலும், அதன் அரசியல் பிடிப்பிலிருந்த இந்தியாவிலும் ஆங்கில மொழி ஆட்சி மொழியாக இருந்துவந்திருக்கிறது. மொழித் துறையில் ஒற்றுமை இருக்கத்தான் இருந்தது. அதற்காக இங்கிலாந்தும் இந்தியாவும் அரசியல் துறையில் ஒன்று என்ற எண்ணம் உருவாகவில்லை. அதற்கு மாறாக, இங்கிலாந்தின் ஆதிக்கத்தைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பே தீவிரமாக வளர்ந்தது; முடிவில் துண்டிக்கப்பட்டுவிட்டது; அத்துண்டிப்பை ஆங்கில மொழியால் தடுக்க முடியவில்லை; துரிதப்படுத்திற்று என்று வேண்டுமானால் கொள்ள இடமுண்டு.

இங்கிலாந்து மக்கள்தான் அமெரிக்காவில் குடியேறி ஆட்சியை நிறுவினர். ஒரு ஆங்கில மொழியைத்தான் அனைத்துக்கும் இரு சாராரும் பயன்படுத்தி வந்தனர்; இப்போது பயன்படுத்தியும் வருகின்றனர். இருந்தாலும் இங்கிலாந்து ஆதிக்கத்தை எதிர்த்து அமெரிக்கா விடுபட ஆங்கில மொழி தடையாக இருக்கவில்லை.

பிரான்சின் வரலாறும் இதைத்தான் படிப்பினையாக நமக்களிக்கிறது. இந்தோ - சீனத்திலும் பிரான்சிலும் பிரெஞ்சு மொழியே வழக்கில் இருந்தது என்ற காரணத்திற்காக, பிரான்சின் ஆதிக்கத்தை அரசியல் துறையில் இந்தோ - சீனம் ஒப்புக்கொண்டு வாழ ஒருப்படவில்லை. வீழ்த்தவே முனைந்தது.

இணைப்பு அல்லது ஒற்றுமையை உருவாக்க மொழிக்கு அறவே ஆற்றல் இல்லை என்பதல்ல நமது வாதம். மொழிக்குள்ள அப்பண்பு ஒரு வரையறைக்குட்பட்டதேயாகும். ஒற்றுமைக்குத் தேவைப்படும் பற்பல இன்றியமையாத நிலைமைகளில் மொழியும் ஒன்றாகும். அதைத் தவிர்த்து மொழியொன்றை மட்டுமே சிறப்பாகக்கொண்டு ஒற்றுமையைக் கட்டி வளர்ப்பது என்பது நிறைவேறக்கூடியதன்று.

வடக்கு—தெற்கிற்கு பல நூறு ஆண்டுக் காலமாக முரண்பட்டக் கலாச்சார அடிப்படையில் முளைத்து, பிரிந்து வளர்ந்து வந்திருக்கிறது. மொழியும் மற்ற வாழ்க்கை வழியும், இரு திசைக்கும் வெவ்வேறாக உள்ளனவாகும். இரு பகுதியினருக்கும் இடையில் காணப்பெறும் பழக்கவழக்கங்களில் ஒற்றுமையைக் காட்டிலும் வேற்றுமையே அதிகம் உண்டு. தாமாகவே இணைந்து வாழும் உளங்கலந்த உறவு முனைப்பு இயல்பாகவே இரு பகுதியினருக்கும் அறவே கிடையாது.

ஆங்கில ஏகாதிபத்தியம் வெளி இணைப்பை உருவாக்கியது. அந்த இணைப்பைப் பாதுகாத்துவரும் பணியில் வடநாடு இப்பொழுது முனைந்துள்ளது.

அவ்விணைப்பு அரசியல் ஆதிக்கத்தின் விளைவு. அதை மொழித் துறையில் இந்தி மொழியின் துணைகொண்டு உறுதிப்படுத்திவிடலாம் என வடநாடு முயற்சிக்கிறது.

அதற்காகத் திராவிட மொழிகளை வடநாட்டு பல்கலைக் கழகங்களில் போதிப்பதற்கு ஏற்பாடு செய்ய முயற்சிக்கப் படுகிறது. அதுபோன்றே, வடநாட்டு மொழிகளை தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களில் போதிக்க எதிர்காலத்தில் ஏற்பாடு செய்யப்படும் எனவும் சேதி தரப்படுகிறது.

இங்கிலாந்திலும்கூட இரண்டொரு பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் பலனாக, தமிழ் நாட்டுடன் இங்கிலாந்திற்கு அரசியல் இணக்கம் ஏற்பட்டுவிடுமென எவர்தான் எதிர்பார்ப்பர்?

வடநாட்டுப் பல்கலைக் கழகங்களில் திராவிட மொழி போதிக்கப்பட்டாலும், தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களில் வடநாட்டு மொழிகள் போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டாலும், அங்கும் இங்கும் சிற்சிலர் அம்மொழிகள்பற்றிய உண்மையை அறிந்துகொள்ள இயலுமேயல்லாது, அதன் விளைவாக வடக்குத் தெற்கு ஒற்றுமையை விரிவாக்கிவிட ஒருக்காலும் முடியாது—அம் முயற்சி வீண் முயற்சி; பணம் பாழாகும் சதி முயற்சி!

வடக்கும்—தெற்கும் உள்ள பிணக்கு பல்லாண்டு காலத்திற்கு முன்னரே தோன்றி, குருதியுடன் கலந்துவிட்ட ஒன்றாகும். அதை இந்தி மொழித் திணிப்பாலும், திராவிட மொழிகளை வடநாட்டில் சிலர் கற்றுக் கொள்ள முயலுவதாலும் இல்லாமல் செய்துவிட முடியாது.

வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபடும்வரையில் திராவிடப் போர்முரசு முழங்காமல் நிற்காது. திராவிட மொழிகளை வடநாட்டார் சிலர் கற்றுக்கொள்ளுகின்றனர் என்ற மாயமாலம், அம்முரசை மாய்த்துவிட உதவாது.

விடுதலைக் குழு லண்டன் செல்கிறது

சுல்தான்களும் ஒப்புதல் தெரிவித்துவிட்டனர்

சிங்கப்பூரை அடுத்து மலாயாவும் விடுதலைப் பாதையில் முன்னேற்றம்

சிங்கப்பூர், டிச. 21—

மலாயாவிற்கு இரண்டாண்டுகளில் சுய ஆட்சியும், நான்காண்டுகளுக்குள் முழுச் சுதந்திரமும் வழங்கவேண்டும் எனக் கோருவதற்காக ஒரு விடுதலை (மெர்டேகா)க் குழு மலாயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான் தலைமையில் புத்தாண்டுத் துவக்க நாளன்று லண்டனுக்குப் புறப்படும் எனத் தெரியவருகிறது.

இந்தியாவில் முன்பு இருந்த தைப் போன்ற சுதேச சமஸ்தானங்கள் போல மலாயாவில் இப்போது உள்ள ஒன்பது சுதேச சமஸ்தானங்களின் அதிபர்கள் கோலாலம்பூரில் மாநாடு ஒன்று கூட்டி மலாயா விடுதலை பற்றி விவாதித்திருக்கின்றனர்

மலாயாவின் ஆட்சிப் பொறுப்பில் இப்போது வீற்றிருக்கும் ஐக்கிய மலாயா தேசிய இயக்கம், மலாயா சீனர் சங்கம், மலாயா இந்தியக் காங்கிரஸ் ஆகிய முக்கூட்டுக் கட்சியினர், மலாயா விடுதலை பற்றி தாங்கள் நிர்ணயித்துள்ள விடுதலை நாள் குறித்து அந்த மாநாட்டிற்குத் தகவல் தந்தனர்

முக்கூட்டுக் கட்சியினர் முடிவு செய்துள்ள விடுதலை பெறுவதற்கான தவணையை, ஜோகூர் சுல்தானைத் தவிர இதரர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

லண்டனில் பிரிட்டிஷாருக்கும்—மலாயா விடுதலைக் குழுவிற்கும் இடையில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளின்போது, பிரிட்டிஷ் சர்க்காருக்கும்—மலாயா சுதேச சமஸ்தானாதிபதிகளுக்கு மிடையில் எத்தகு உறவு நீடிப்பது, கம்யூனிஸ்டு தாக்குதல்கள் ஏற்பட்டால் உள்நாட்டிற்கு எவ்விதம் பாதுகாப்புத் தேடுவது, மலாயாவின் பாதுகாப்பு, நிதி, பொதுப்பணிகள் இவை குறித்தெல்லாம் விவாதிக்கப்படும் எனறு தெரியவருகிறது.

மலாயா சீக்கிரம் விடுதலை பெறுவதற்கு வகை செய்யும் பொருட்டு லண்டன் மாநாட்டிற்குப் பிறகு மலாயா அரசியல் சட்டத்தைப் பரிசீலிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்படும் என்றும், அந்தக் குழுவின் பணிகள், அது அமைக்கப்படும் காலம், அதில் இடம்பெறும் நபர்கள் பற்றிய விவரங்கள் எல்லாம் லண்டன் மாநாட்டில் தீர்மானிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

மலாயாவின் சொந்த நிலவும் நெருக்கடி நிலை, மலாயா சுதந்திரம் பெறும் துறையில் முன்னேறுவதற்கு முட்டுக்கட்டையாயிராது என்று மலாயாவில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர், தேசியவாதிகளுக்கு உறுதியளித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சந்நியாசிகள் சாகசம்!

ரூ. 2,90,000 பெறுமானமுள்ள சாமான்களுடன் மறைந்தனர்?

போலீஸ் நிலையங்களுக்கெல்லாம் தகவல் தரப்பட்டுள்ளதாம்!

இந்தூர், டிச. 23—

இந்தூரிலுள்ள மகேசுவரா ஆலயத்திலிருந்து களவாடப்பட்டுள்ள தங்கத் தொட்டில், அதைத் தொங்கவிடுவதற்கான 3 தங்கக் கம்பிகள், பூஜை செய்வதற்குப் பயன்படுத்தும் பாத்திர வகைகள் சம்பந்தமாக இரண்டு சந்நியாசிகளை மத்திய பாரத் மாநில போலீசார் தேடிவருவதுடன், இந்தியாவிலுள்ள போலீஸ் நிலையங்களுக்கெல்லாம் அவர்களைப் பற்றிய தகவல்களைத் தந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தித் திணிப்பிற்கு மூன்று பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் எதிர்ப்பு

★

'ஆங்கிலத்தை அகற்றக்கூடாது'

அம்பாலா, டிச. 21—

"ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்தி மொழியையோ, அல்லது வட்டார மொழிகளையோ உடனடியாக அமர்த்துவது என்பது கூடாது. பரீட்சைகளுக்கான மொழியாகவும் ஆங்கிலத்திற்குப் பதில் வேறு மொழிகளைப் புகுத்தக் கூடாது; இப்படி ஒரு சோதனை நடத்திப் பார்ப்பதும் விரும்பத்தக்கது அல்ல.

"சர்க்காருக்கு உழைக்க வேண்டும—என்று விரும்புகிற எவரும், ஆங்கில மொழியைத் திறம்படக் கற்றே ஆகவேண்டும்.

"நாம் கணிக்கக் கூடிய எந்த ஒரு எதிர்காலத்திலும், பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் மிக முக்கியமானதோர் இடத்தைப் பெறவேண்டிய ஆங்கிலத்தை நாம ஒதுக்கித் தள்ளுவது கூடாது.

"அகில உலக அரசியல் வர்த்தகத் துறைகளில், ஆங்கிலம், உலக மொழிகளில் இன்று முதலிடம் வகித்துக்கொண்டிருக்கிறது; மேலும் பல மேலைநாடுகளில் ஆங்கிலம் எல்லாப் பள்ளி மாணவர்களுக்கும் கட்டாயப் பாடமாக இருந்து வருகிறது.

"இன்று, உலகத்தில் முன்னேறிய சிந்தனை இயக்கங்களின் அறிவைப் பெற வேண்டும் எனக் கருதும் எவருக்கும் ஆங்கில மொழி அறிவு முக்கியமானதாகும்; தவிர்க்கவொண்ணாதது."

என்று குருக்ஷேத்ரா பல்கலைக் கழகத் துணைவேந்தரான வி. என். சித்தாந்தா, பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

'தென்னாட்டில் இந்தி மொழி போதனா மொழியாகக்கூடாது'

கர்னூல், டிச. 2 —

"இந்தியாவின் அலுவல் மொழியாகவும் போதனா மொழியாகவும் ஓரே மொழியே இருக்க முடியாது. தென்னாட்டைப் பொறுத்தமட்டில், இந்திய நிர்வாகப் பணிக்கான பரீட்சைகளில் இந்தி கட்டாய பாடமாக இருக்கக் கூடாது. பணித் தேர்வு நடைபெற்றபின் வேண்டுமானால் இந்தி மொழியில் ஒரு பரீட்சை எழுதுவதற்கு அவகாசம் தந்து தேர்வு பெறச் செய்துகொள்ளலாம்,"

—என்று, இரண்டு பிரபலமான கல்வி நிபுணர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தரான டாக்டர் வி எஸ் கிருஷ்ணாவும், திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத் துணைவேந்தரான டாக்டர் கோவிந்தராஜுலுவும், இந்தியப் பேரரசு நியமித்துள்ள ஆட்சிமொழிக் குழுவினரின் வினாத்தாளுக்குப் பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியிருக்கின்றனர்.

இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதற்குக் காலவரம்பு நிர்ணயிப்பது விரும்பத் தக்கது அல்லவென்றும், இந்தி தேசிய மொழியாக வளருவதைப் பொறுத்தே அது ஆட்சி மொழியாக அமரும் காலம் வர முடியும் என்றும் டாக்டர் கோவிந்தராஜுலு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும், 'தென்னாட்டில் உள்ள கல்வி நிபுணர்களின் கருத்தும், குறிப்பாக தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களின் கருத்தும இந்தியைப் போதனா மொழியாகக் கொண்டு இருக்க முடியும்' என்றும தெரிவித்திருக்கிறார்.

காட்டுப்பாடி தி. மு. க. தோழர்களின் புயல் நிவாரண நிதி வசூல்

'ஆசை நினைவு' நாடகத்தில் அண்ணா அவர்களிடம் அளித்தனர்

எம். ஜி. இராமச்சந்திரன் ஏல விற்பனை

20—12—55 அன்று, வ. ஆ. மாவட்டம் காட்டுப்பாடியில் தி. மு. கழகத் தோழர்கள் எம். ... புயல் நிவாரண நிதி திரட்டுவதாமென, புலிவேடம் பூண்டு சிலம்பு விளையாட்டுடன் காட்டுப்பாடி திரு கே. குப்புசாமி அவர்கள் தலைமையில் மற்றும் தி. மு. கழகத் தோழர்கள் வேலம் ... பஞ்சாயத்து உறுப்பினர் பி கே முனுசாமி மற்றும் கிராம மக்களும் ... வீதிவீதியாகச் சென்று 2 மூட்டை அரிசியும், ½ மூட்டை கேழ்வரகும் சோளமும் ரூ 165-9-3 ரொக்கமாகவும் வசூலித்தனர். இதில் தங்களது செலவுக்கான தொகை ரூ 14-8-0 போக மீதி ரூ 151-1-3 ஐ இருப்பில் வைத்திருந்தனர்.

அன்று மாலை புயல் நிவாரண நிதிக்காக நடிகர் தோழர் எம் ஜி. இராமச்சந்திரன் அவர்களின் 'ஆசை நினைவு' நாடகம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது, மேற்கண்ட சோளம், கேழ்வரகு, அரிசி, பணம் ஆகியவைகள் அண்ணாவிடம் கொடுக்கப் பட்டது.

காட்டுப்பாடி கிளைக் கழகத் தோழர்கள் பத்மநாபன், வேலாயுதம், தாஸ் மற்றும் தோழர்களுடன் கிராமங்களில் வசூல் செய்த சோளம் 2 மூட்டை, நெல் 1 மூட்டை அண்ணாவிடம் அளிக்கப் பட்டது

புயல் நிவாரண நிதிக்காக நடைபெற்ற நாடகத்தில் தோழர் எஸ் ராஜன் அவர்கள் தோழர் எம ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம் ஒரு பெரிய மூறுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அதை தோழர் எம் ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஏலம் விட்டபோது ரூ. 25-க்கு தோழர் என். எஸ் நாராயண (பின்னி) அவர்கள் வாங்கினார் ... தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அன்பளிப்பாக அளித்த ... அண்ணாவின் விருப்பத்தின் பேரில் தோழர் எம் ஜி இராமச்சந்திரன் அவர்கள் ஏலத்திற்கு விட்டதில் ரூ. 65-க்கு காஞ்சிபுரம் நகரசபை உறுப்பினர் பாபு அவர்கள் எடுத்தார். மேற்கண்ட தொகைகளும் புயல் நிவாரண நிதியுடன் சேர்க்கப்பட்டன.

சென்னை 14-வது வட்ட தி. மு. கழகம்

சென்னை 14-வது வட்ட தி மு கழகக் கிளையினர், தங்களது வட்டத்தில் ரூ 340—4—0ம், 25 படி அரிசியும், 310 துணி உருப்படிகளும் திரட்டினர்

பேராவூரணி பிர்கா புயல் நிவாரணக் குழு

22—12—55-ல் பேராவூரணி பிர்கா புயல் நிவாரணக் குழு கூட்டம், தோழர் வி. வயிரவன் தலைமையில் நடைபெற்றபோது புயலால் பாதிக்கப்பட்டோருக்கு சென்னை சர்க்கார் வீடு கட்டுவதற்கு ரூ. 3000-மும், வட்டி 4½ சதவிகிதமும், தவணைக் காலம் 10 ஆண்டுகள் என்றும் முடிவு செய்திருப்பதை மாற்றி, தவணைக் காலத்தை 15 ஆண்டுகளாகவும் கொடுக்கும் தொகையை ரூ. 5000 ஆகவும் அதிகரித்து, வட்டியை 3 சதவிகிதமாகக் குறைத்தும் உதவி செய்யக் கேட்டுக்கொண்டும், தென்னந்தோப்புச் சேதம் அடைந்தவர்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் 15 வருடத் தவணைக்கு வட்டியின்றி தனியாகப் பணம் கொடுக்க வேண்டுமென்றும், கால்நடைகள் வாங்குவதற்கென தக்காவி ... 10 ஆண்டுக் கெடுவாக நீடிக்க வேண்டுமென்றும், புயல் நிவாரணக் குழு அமைக்கப் படாத கிராமங்களில் உடனடியாகக் குழுக்கள் அமைத்து, சர்க்காரால் கொடுக்கப்படும் நிவாரணங்களை குழுவின் ஆலோசனையின் பேரிலேயே கொடுக்க வேண்டுமென்றும், நடுத்தர விவசாயிகளுக்கு வீட்டின் சேதம் அதிகம் இருப்பதால் அவர்கள் உடனடியாக வீடு கட்டிக்கொள்வதற்கு சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திட்டத்தை உடனடியாக அமுல் நடத்த வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பத்தூர் (வ. ஆ.) விவசாயிகள் சங்கம்

14—12—55-ல் நடைபெற்ற மேற்படி சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில் 'உழவன் கலைக் குழு' வின் சார்பில் ஓர் நாடகம் நடத்தி, அதில் வசூலாகும் பணத்தை விவசாயிகள் சங்கச் சார்பில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்புவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

தேவகோட்டை புயல் நிவாரணக் குழுத் தலைவரிடம் (நகர சபைத் தலைவர்) பொதுச்செயலாளர் நிவாரண வேலைகளைப்பற்றி உரையாடிக்கொண்டிருக்கிறார். நின்றுகொண்டிருப்பவர் தோழர் இராம. வெள்ளையன் அவர்கள்.

திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகம்

19—12—55ல், திரு மு. நடராசன் தலைமையில் நடைபெற்ற சென்னை 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக பொதுக் குழுக் கூட்டத்தில், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டும், சனவரித் திங்கள் 15-ம் நாள் திராவிடர் திருநாள் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தோப்புத்துறையில் புயலால் சாய்க்கப்பட்டு, வெள்ளத்தால் அழிக்கப்பட்ட குடிசைகளைப் பார்வையிட்டுப், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைப் பார்த்துப் பொதுச்செயலாளர் விவரம் கேட்டறிந்து கொண்டிருக்கிறார்.

தோப்புத்துறையில் பொங்கிவந்த கடல் கொந்தளிப்பில் அலக்கழிக்கப்பட்டு, வீட்டுப் பொருள்கள் அத்தனையையும் கடல் கொண்டுபோக, மீதமாகத் தங்கிய வெறும் செங்கற்குவியல்கள். அந்தக் குவியலின்மீது நின்று பொதுச்செயலாளரும், தஞ்சை மாவட்டச் செயலாளரும் அலங்கோலத்தைப் பார்வையிடுகின்றனர்.

இந்திய சர்க்காருக்கு வர்த்தகசபை எச்சரிக்கை

கல்கத்தா, டிச 23—

"தனிப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்களின் உற்பத்திக்குக் கட்டுப்பாடுகள் ஏதேனும் விதிக்கப்படுமானால், நிலக்கரித் தொழிலின் உற்பத்தித் திட்டத்தை அக்கட்டுப்பாடு வெகுவாகப் பாதிக்கும்," என்று கல்கத்தா வர்த்தக சபையின் குழு, இந்திய சர்க்காருக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

புயல் நிவாரண நிதி வசூல்

டெல்லியில் சம்பத்—பேபி கந்தசாமி முயற்சி

வடநாட்டில் சுற்றுப்பயணம் செய்துவரும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், டெல்லியில், மக்கள் சபை உறுப்பினரான தோழர் பேபி கந்தசாமியுடன் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ள நிவாரணத்திற்காக நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த கிழமையில் ரூ. 300 வரை வசூல் செய்திருக்கின்றனர்.

தோழர் பேபி கந்தசாமி அவர்கள் நிதி திரட்டுவதில் காட்டி வரும் ஆர்வமும் திறமும் பாராட்டுதலுக்குரியனவாகும்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட இயற்கைக் கொடுமைகுறித்து ஏகாதிபத்திய அரசியல் வட்டாரங்கள் சிறிதும் கவலைப்படுவதாய்த் தெரியவில்லை. தோழர்கள் சம்பத், பேபி திரட்டும் நிதி விவரம் பற்றி அடுத்து அறிவிக்கப்படும்.

குணியமுத்தூர்

21—12—55 இரவு இவ்வூர் பாடசாலையில் வாரணமைக் கழகத் தலைவர் திரு. எம். சுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிவாரண குழுக் கூட்டத்தில், திரு. எம் சுந்தரம் அவர்களைத் தலைவராகக் கொண்டு, குணியமுத்தூர் தி. மு கழகச் செயலாளர் தங்கமாணிக்கம் உட்பட 28 பேர்களைக் கொண்ட நிதி வசூல் குழு அமைக்கப்பட்டு, ஊர் முழுவதும் நிதி வசூல் செய்து வருகின்றனர்.

கோவில்பட்டி

19—12—55ல், தி. மு. கழகத் தோழர்கள் டபிள்யூ டி. துரைசாமி, மு. அருணாசலம், ஜி. தேவராசன், நெல்லை எல். நரசு, ஆவுடநாயகம் ஆகியோர் பலவிதமான வேடங்களணிந்து, தெருக்கள் தோறும் சென்று ரொக்கம் ரூ. 208—12—3, 4 வேட்டிகள், 2 துண்டுகள், ஒரு கருப்புக் கட்டி சிப்பம், 10 படி அரிசி, ½ மூட்டை உபயோகிக்கக்கூடிய பழைய துணிகள் ஆகியவற்றை வசூலித்தனர்

திருப்பூர் நகர தி. மு. க. தோழர்கட்கு

"திருப்பூர் நகர—அதன் சுற்றுப்புறத் தோழர்கள், வருகிற ஆண்டுக்கு உறுப்பினராகப் புதுப்பித்துக்கொள்ளவும், புதிதாகச் சேரவும் வாய்ப்பளிக்கும் வகையில், உறுப்பினர் படிவங்கள் நகரின் முக்கியத் தோழர்கள் வசம் கொடுக்கப்பட்டுள்ளன. 'நம் நாடு' விற்பனையாளர் தோழர் மாணிக்கம் அவர்களிடமும் படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் சேர்த்து அளிக்க ஆர்வமுள்ளவர்கள் தோழர் மாணிக்கம் அவர்களிடமோ, அல்லது நகரக் கழகச் செயலாளரிடமோ கையொப்பமிட்டுப் படிவங்கள் பெறலாம். தோழர்கள் தாமதமில்லாமல், படிவங்கள் பெற்ற தோழர்களிடமோ, நகரக் கழகச் செயலாளரிடமோ, பதிவு செய்து கொள்ளலாம். மேலும் காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை எந்த நேரத்திலும், நெ. 1, பல்லடம் ரோட்டிலுள்ள தோழர் மாணிக்கம் அவர்களின் 'திராவிடப் புத்தகப் பூங்கா' வில் உறுப்பினராக விரும்புவோர் பதிவு செய்து கொள்ளலாம்,"

என்று, திருப்பூர் நகர தி. மு. கழகச் செயலாளர் மு. முத்துரெத்தினம் அறிவிக்கிறார்.

கழகச் செய்திகள்

★

கடலூர் நகர தி. மு. கழகம்

17—12—55 இரவு நடைபெற்ற நகரக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், நடைபெறப்போகும் திராவிடர் திருநாளில், மாவட்டச் செயலாளர், விழாக் குழுத் தலைவர் ஆகியோரின் யோசனைப்படி தோழர் கி. கோவிந்தராசன் (கடலூர் ஓ டி) அவர்களுக்கு ரூ. 250 உதவி நிதி கொடுப்பதெனவும், நகரக் கழகத் துணைச் செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் உள்பட கே. இளங்கோ அவர்களின் விலகுதல் கடிதம் குழுவில் ஏற்றுக் கொள்ளப்பட்டும் முடிவுகள் செய்யப்பட்டதுடன் முக்கிய தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சாத்தான்குளம் நகர தி. மு. கழகம்

18—12—55-ல், தோழர் சைலாத் தலைமையில் நடைபெற்ற நகரக் கிளை உறுப்பினர் கூட்டத்தில், அடுத்த ஆண்டு ஜனவரித் திங்கள் 19-ந் தேதியன்று திராவிடர் திருநாள் விழாவையும், கிளைக் கழக 8-வது ஆண்டு விழாவினையும், 20—1—56-ல், புளியங்குளம் கிளைக் கழகத்தின் முதலாண்டு விழாவையும் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

சேலம் நகர தி.மு. கழகம்

21—12—55 இரவு 9 மணிக்கு சேலம் நகரக் கிளை உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது, பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கும், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயலால் இறந்துபட்டவர்களுக்கு அனுதாபம் செலுத்தியும், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் சர்க்கார் நிரந்தர நிவாரணம் அளிக்கவும், அம்மாப்பேட்டை கொடி வழக்குச் செலவுக்கு ரூ. 50 கொடுப்பதென்றும், நகரிலுள்ள கிளைக் கழகங்கள் உடனடியாக உறுப்பினர்கள் சேர்க்க வேண்டுமென்றும், அதிக உறுப்பினர்கள் சேர்க்கும் கிளைக்குச் சிறந்த பரிசு வழங்குவதென்றும், மாநில மாநாட்டு நிதி அளிப்புக் கூட்ட வரவு-செலவு கணக்கினை ஏற்றுக்கொண்டும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

'பலன் தருமானால் துண்டு துண்டாக்குங்கள்!'

உ. பி.-யைப் பிரிப்பதற்கு ஒப்ப மறுத்து பண்டித பந்த் ஆத்திரப் பேச்சு

புதுடில்லி, டிச. 23—

"இந்தியாவில் உள்ள எந்தத் தனி மாநிலத்தின் முன்னேற்றத்திற்கேனும் ஊறு விளைவிக்கக்கூடியதாய்—தடைக்கல்லாய் இருந்தால், இப்போதிருக்கிறபடியே உத்திரப் பிரதேசம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை.

"நாட்டிற்குப் பயன்படும் என்று கருதினால், உத்திரப் பிரதேசத்தை சுக்குநூறாக உடைத்துவிடுங்கள்; பிரித்துவிடுங்கள்.

"உத்தரப் பிரதேசம்போன்ற பெரும் மாநிலங்கள் அமைவதை நான் விரும்புகிறேன்; ஏனெனில் நான் உ. பி.-யில் வாழ்ந்திருக்கிறேன்—கஷ்டப்பட்டிருக்கிறேன்.

"ஒரு பெரிய மாநிலத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருப்பதினால் என்ன இலாபம் என்பது எனக்குத் தெரியும். என்ன பலன்கள் அதனால் விளையும் என்பதையும் நான் உணர்வேன். அந்தப் பலன்களினால் யாருக்கும் தீங்கு ஏற்படாது; ஆனால் எல்லோருக்கும் நன்மைதான் ஏற்படும்.

"இதைக் காட்டிலும் பெரிய மாநிலங்கள் அமைப்பதை நான் விரும்புகிறேன்; அப்போது ஒரு மாநிலத்தின் பலவீனம் மற்ற மாநிலத்தின் பலத்தினால் சரிக்கட்டப்பட்டுவிடும். எனவே எதையும் ஏற்றுக்கொள்ளவும், புரிந்துகொள்ளவும் அவசியமான உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டியது இப்போது மிக இன்றியமையாத தேவையாகும்; இல்லாவிட்டால், இலட்சக்கணக்கான மக்களிடையே வேலை செய்ய முடியாது. பெரிய மாநிலங்களில் குறுகிய புத்திக்கோ, அற்ப புத்திக்கோ இடமில்லை,"

—என்றெல்லாம் இந்திய உள்நாட்டுத் துறை அமைச்சர் பண்டித பந்த் அவர்கள், மக்கள் சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிக்காரர்கள்—காங்கிரசார் உட்பட—உத்திரப் பிரதேசம் மாநிலப் புனரமைப்பின் போது எந்தவித மாறுதலுக்கும் உட்படாதது குறித்துப் பலத்த கண்டனம் தெரிவித்துப் பேசியதற்குப் பதிலளிக்கும் வகையில், கண்களில் ஆத்திரம் பொங்க, குரலில் நடுக்கம் தொனிக்கப் பிரலாபித்திருக்கிறார்.

புயல் நிவாரணச் சிறப்புக்கூட்டம்

★

1—1—56 மாலை 5 மணிக்கு சென்னை-எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில் (எழும்பூர் இரயிலடிக்கருகில்) நடைபெறும்

அண்ணா நெடுஞ்செழியன் கருணாநிதி

மற்றும் பலர் பேசுவர்

★

அனுமதி நிபந்தனை:
பயன்படக்கூடிய துணி ஒன்று தருவோரே அனுமதிக்கப்படுவர்

—சென்னை மாவட்ட தி.மு.க

கழகக் கூட்டம்

★

பம்பாய்
கோரேகான் தி. மு. க. துவக்கவிழா
கவர்ன்மெண்ட் காலனியில்
(நவராத்திரி மண்டல்)
27-12-55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ஏ. வி. இராமன்
வரவேற்பாளர்:
இரா. தஞ்சைத்துரை
பேசுவோர்:
கண்ணதாசன்
சண்முகம்

புயல் நிவாரண நிதி அளிப்புக் கூட்டம்

25-12-55 மாலை 6 மணிக்கு, சென்னை-ஜார்ஜ் டவுன் ராபின்சன் நகர் மைதானத்தில், தமிழகப் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்குமுகத்தான், சென்னை பக்கிங்காம், கர்நாடிக் ஆலைத் தொழிலாளர்கள் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் ஒன்று, சென்னை மாநில அமைச்சர் இராஜேசுவர சேதுபதி தலைமையில் நடைபெறும். நிவாரண நிதியாக, ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் அமைச்சரிடம் ரூ. 50,000 கொண்ட பண முடிப்பொன்று அளிக்கப்படும். கூட்டத்தில், சென்னை ஷெரீப் ஆர். இ. காஸ்டல், பின்னி கம்பெனி டைரக்டர், ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். சி. சி. அந்தோனி எம். எல். ஏ., ஆகியோர் கலந்துகொள்வர்.

சென்னை 12-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

25—12—55 காலை 9 மணிக்கு, சென்னை 12-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, 'திராவிடர் திருநாளில் நமது பங்கு' என்பதைப் பற்றி முடிவு செய்யப்படும்.

அன்பழகன் மறுப்பு

★

'சீதையின் காதல்' என்னும் ஏட்டை, என் பெயரில் மதுரை 'அறிவுப் பண்ணை' வெளியிட்டுள்ளதை அண்மையில் கண்டு துணுக்குற்றேன். அந்த ஏட்டை வெளியிட என்னிடம் யாரும் உரிமை கேட்காததோடு, வெளியிட்டதையும் தெரிவிக்கவில்லை. நானும், எவருக்கும் அதை வெளியிட இசைவு அளிக்கவும் இல்லை.

நான் ஆற்றியதொரு சொற்பொழிவை வெளியிடும் வகையில் அமைந்துள்ள இந்த ஏடு, சொல், தொடர், கருத்து, விளக்கம், முடிபு ஆகிய அனைத்தாலும் தவறுபட்டும், பிழை மலிந்தும், குற்றங் குறை நிறைந்தும், தரங்கெட்டும், முறையற்றும், உண்மைக்கு மாறாகவும், இழிசுவை பயப்பதாகவும் காணப்படுகின்றது. என் சொற்பொழிவைச் சிதைத்துக் கெடுத்தும் சீரழித்துச் சிறுமை செய்துள்ளது. அதில் காணப்படும் கருத்துக்கள் பலவும் என்னுடைய தகுதிக்கே இழுக்குத் தேடுவதோடு, மானக்குறைவும் விளைவிப்பன.

பொதுமக்கள் தொடர்பு கொண்ட என் பெயரால் இந்த ஏட்டை வெளியிட்டுப் பொதுமக்களை ஏமாற்றமும் வெறுப்புங் கொள்ளச் செய்வது மிக்க வேதனை அளிப்பதாகும். எனவே, இதனை வெளியிட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். பொதுமக்கள் இந்த ஏட்டை என்னுடையதாகக் கொள்ளவேண்டாமென்றும், இதன் விற்பனைக்குத் துணை செய்ய வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,
க. அன்பழகன்

மக்கள் சபை முன்பு 1,000 தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

தொழிற்சட்டங்கள் மதிக்கப்படுவதில்லை எனப் புகார்

இரு போலீசார் உட்பட 12 பேர்களுக்குக் காயம்

புதுடில்லி, டிச. 23—

மக்கள் சபை முன்பாக சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் கூடி இன்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். போலீசார் அவர்களை அப்புறப்படுத்துவதற்கு தங்களிடமிருந்த தடிகளை உபயோகித்ததினால் இரு போலீசார் உட்பட 12 பேருக்குக் காயங்கள் ஏற்பட்டனவாம்.

கட்டிடம் கட்டுதல், தோல் தொழில், மேசை, நாற்காலி உற்பத்திசாலைகள் இத்துறைகளில் எல்லாம் தலை நகரில் தொழிலாளர்களுக்கான சட்டங்களைத் தொழில் நிர்வாகிகள் பின்பற்றுவதில்லை என்பதால், அதைக் கண்டிக்கவே இத்தகு ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள் தொழிலாளர்கள்.

அந்தத் தொழிலாளர்கள், மக்கள் சபையின் தடுக்கப்பட்ட—பாதுகாக்கப்படும் பகுதிகளுக்குள் நுழைய எத்தனித்ததால் அவர்களைத் தடுத்ததாயும், அதனால் தொழிலாளர்கள் தங்களுடன் மோதிக்கொண்டதாயும் போலீசார் தரப்பில் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து மக்கள் சபையில் குறிப்பிட்டு, ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப திரு-கொச்சியைச் சேர்ந்த சுயேச்சை உறுப்பினர் ஆர். வேலாயுதன் செய்த முயற்சி வெற்றி பெறாது போய்விட்டது என்றும் தெரிய வருகிறது.

நெல்லை மாவட்ட தி.மு. கழகக் கிளைகளுக்கு

"எல்லாக் கிளைகளுக்கும் உறுப்பினர் பதிவுத் தாள்கள் அனுப்பப்பட்டுள்ளன. பதிவுத் தாள்கள் மீண்டும் தேவைப்படுகிற கிளைகள் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளப் பதிவுத் தாள்களைப் பூர்த்தி செய்து, பணத்துடன் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட்டு M.O. ரசீது எண்ணைக் குறிப்பிட்டு எனக்கு எழுதினால்தான் மீண்டும் பதிவுத் தாள்கள் அனுப்பப்படும்.

"உறுப்பினர் சேர்க்கும் கிளைகள், தனியாக ஏடு போட்டு உறுப்பினர்களைப் பதிவு செய்து வைத்துக்கொள்ள வேண்டும்; அதன் நகல் ஒன்றை மாவட்டக் கழகத்திற்கும் அனுப்பித்தர வேண்டுகிறேன்"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அறிவித்துக்கொள்கிறார்.

அரசியல் வாழ்வு அபராதம் கட்ட குறுக்கிடுகிறதாம்

சிறை சென்ற ஆதித்தனின் சமாதானம்

சென்னை, டிச. 23—

செங்கற்பட்டு மாவட்டம் மாத்தூர் கிராமத்தில், விவசாயிகள் போராட்டம் காரணமாக விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை மீறியதாகவும், சட்டவிரோதமான 'கோஷ்டி' ஒன்றுடன் சேர்ந்திருந்ததாகவும் தோழர் எஸ். பி. ஆதித்தன் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்கை விசாரணை செய்த சைதாப்பேட்டைசப்மாஜிஸ்திரேட் இரு குற்றச்சாட்டுகளின் மீதும் ரூ. 20 அபராதமும், கட்டத் தவறினால் 10 நாள் சிறைத் தண்டனையும் விதித்தார்.

'நான் அரசியல் வாழ்வில் ஈடுபட்டவன்; அபராதம் செலுத்த இயலாது; அவ்வாறு செலுத்தினால், பிறர் என்னைக் கோழை என்று கூறுவார்கள்' என்று கூறி, சிறைத் தண்டனையை ஏற்றுக் கொண்டார்.

இந்தியா—மங்கோலியா தூதுவர் உறவு

ஏற்படுத்திக் கொள்ள முடிவு

புதுடில்லி, டிச 23—

மங்கோலியா மக்கள் குடியரசுக்கும்—இந்திய சர்க்காருக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையின் பலனாக, இருநாடுகளுக்கிடையேயும் தூதுவர்களை ஏற்படுத்திக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

இரண்டாம் திட்ட மதிப்பு

ரூ. 4,800 கோடியென இறுதி முடிவு?

புதுடில்லி, டிச. 23—

இரண்டாம் திட்டத்திற்குச் செலவிடக்கூடியது என்று கருதப்படும் தொகையின் மதிப்பீடு சர்க்கார் துறையில் ரூ. 4,800 கோடி மட்டுமேதான் என்று திட்டக் குழுவினர், மாநில, மத்திய மந்திரிசபைகளுக்கு அறிவித்துவிட்டனராம்.

இந்தத் தொகையில் ரூ 2,241 கோடி மாநில சர்க்கார்களும், எஞ்சிய ரூ 2,586 கோடியை மத்திய சர்க்காரும் பெறுவர் என்றும் தெரியவருகிறது.

திட்டத்தில் பெருமளவு நிச்சயமற்றத் தன்மை உள்ளடங்கியிருப்பதாயும், அவ்வப்போது திட்டத்தைப் பரிசீலித்துக்கொண்டிருக்க வேண்டுவது மிக அவசியம் என்றும் கருதப்படுகிறதாம்.

திருச்சி பெரியகடை வீதி தி. மு. க.(கிளை)உறுப்பினர்கட்கு

27—12—55 இரவு 9 மணிக்கு, திருச்சி பெரியகடை வீதி தி. மு. கழக (கிளை) உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் (பாண்டியன் படிப்பகம்) நடைபெறும். அதுபோது பல பொருள்கள் குறித்து ஆராயப்படும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

25—12—55 காலை 10 மணிக்கு சென்னை 39-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (எண் 34, அப்பாவு கிராமணி தெரு) தோழர் கா. இலக்குமணன் தலைமையில் நடைபெறும். 'கலையும்-கிளர்ப்பும்' எனும் பொருள் பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பக உறுப்பினர்கட்கு

25—12—55 காலை 9 மணிக்கு திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பக நிர்வாகிகள் தேர்தல், மேற்படி படிப்பகத்தில் நடைபெறும்.

தாழ்த்தப்பட்ட தோழர்கள் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகிவிட்டனராம்!

நாகப்பட்டினம், டிச 18—

நாகை வட்டம் ஆவராணி கிராமத்தைச் சேர்ந்த 100 தாழ்த்தப்பட்ட மக்கள், கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும், கடந்த எட்டாண்டுகளில் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்ததினால் பலன் ஏதும் பெறாததே அதற்குக் காரணம் என்றும் தோழர் எஸ். தட்சிணாமூர்த்தி என்ற ஒரு தாழ்த்தப்பட்ட தோழர், கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினாராம்.

உருப்படாத யோசனை—உருவான வடிவம் பெறுமாம்!

"திருத்தி அமைக்கப்படும் மாநிலங்களை ஐந்து வட்டங்களாகப் பிரித்து வட்டார ஆலோசனை சபைகளை அமைக்கவேண்டும் என்று பிரதமர் நேரு தெரிவித்த யோசனை உருவான வடிவம் பெறும்," என்று, மக்கள் சபையில், உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

"வேறெதற்காகவென்றில்லாவிடினும், பொருளாதார அபிவிருத்திக்காகவேனும், இத்தகு சபைகள் அமைப்பது விரும்பத்தக்கதே; மேலும், சில இடங்களில் பிரிவினையினால் ஏற்படும் வேதனைகளை அகற்றவும் பயன்படும்," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சந்நியாசிகள் சாகசம்!...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்நியாசிகள் வேடத்திலிருந்த அவர்கள், 7-ந் தேதி இரவு மகேசுவரர் ஆலயத்தில் வந்து தங்கியதாகவும், களவுக்குப் பின்னர் அவர்கள் காணப்படவில்லையென்றும் போலீசார் கூறுகின்றனர்.

தங்கத் தொட்டிலும், அதன் கால்களும், சாமான்களும் ரூ 1,90 000 மதிப்புள்ளவையாம்!

இவைகளுடன் மட்டுமின்றி, ரூ 1 இலட்சம் மதிப்புள்ள வலம்புரிச் சங்கு ஒன்றும் களவாடப்பட்டிருக்கிறதாம். இதுபோன்ற சங்குகள் இந்தியா-ஐரோப்பாவின் நாடுகளில் மூன்றுதான் உள்ளனவாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.